☎ 04175 - 236654 / 235295

# SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in


## திருவண்ணாமலை சண்முகா கல்லூரியில் இயற்கை மருத்துவ முகாம்

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியும், திருவண்ணாமலை சாய் சேவா யோகா இயற்கை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையமும் இணைந்து இயற்கை மருத்துவ முகாம் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் வாழ்வியல் கருத்தரங்கம் **ரோக் முக்த்த பாரத் அபியான்** நிகழ்ச்சியை நடத்தினர். கல்லூரியின் முதல்வர், முனைவர் பேரா.**கே.ஆனந்தராஜ்** வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** தலைமையுரையாற்றினார். பொருளாளர் **எம்.சீனுவாசன்** முன்னிலை வகித்தார். கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** வாழ்த்துரை வழங்கினார். துணை முதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சியினைத் தமிழ்த்துறைத் தலைவர் **இரா.சங்கர்** தொகுத்து வழங்கினார்.

மத்திய அரசின் தேசிய இயற்கை மருத்துவ நிறுவனம் (ஆயுஷ் அமைச்சகம் இந்திய அரசு) இணைந்து வழங்கிய இந்நிகழ்ச்சியில், திருவண்ணாமலை சாய் சேவா யோகா இயற்கை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் முதன்மை மருத்துவர் **ப.எழில்மாறன்** அவர்கள் கருத்துரை வழங்கியதோடு பேராசிரியர்களின் ஐயங்களுக்கும் விளக்கமளித்தார். “கொரோனா பெருந்தொற்றிற்குப் பிறகாகப் பலரும் மன அழுத்தத்துடனும், பயத்துடனும் உள்ளதையெல்லாம் சுட்டிக்காட்டி, எவ்வாறு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கிக்கொள்ள வேண்டுமென்றும், உணவுப் பழக்கத்தை சீரான வகையில் மேற்கொள்ள வேண்டுமென்றும் விளக்கியதோடு, பிறருக்கு உதவுகின்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதும், எந்த ஒரு காரியத்தையும் பதற்றம் இல்லாமல் செய்யப் பழக வேண்டுமென்றும் விளக்கினார். அதனைத் தொடர்ந்து மூச்சு பயிற்சியினையும் வழங்கினார்.

சாய் சேவா யோகா இயற்கை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் மருத்துவர் **கிருபாநிதி எழில்மாறன்,** மருத்துவர் **கர்மேலின்** உள்ளிட்ட குழுவினர் உடன் வருகை தந்து முகாமில் இரத்தப் பரிசோதனை மேற்கொண்டதோடு இயற்கை மருத்துவ ஆலோசனைகளையும் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் கல்லூரிப் பேராசிரியர்கள், அலுவலகப்பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

செயலர் மற்றும் தாளாளர்


SYNCH
Azadi Ka Amrit Mahotsav
National Institute of
In Association with
NATURE CURE HOSPITAL AND RESEARCH CENTRE
(Run By : NYRD TRUST)
483/42C, Big Street, Tiruvannamalai - 606 601, Tamil Nadu.
COVID 19